இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. மகளிர் மற்றும் தொண்டர் அணி செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி பங்கேற்று சிறப்புரையாற்றினார். இதில் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் – வீடு வீடாகச் சென்று

இளைஞர் அணியில் 15 வயது நிரம்பிய இளைஞர்களை சேர்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபடுவீர் !

மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் முடிவு – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், ஆக. 5 - வரும் காலத்திலும் கழகம் வலிவோடும் - பொலிவோடும் திகழ்ந்திட வேண்டும் என்பதற்காக, "இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை" என்ற உன்னத திட்டத்தை அறிவித்து, புதிய உறுப்பினர்களை கழக இளைஞர் அணியில் சேர்த்திட வேண்டும் என்று இளைஞர்களின் இதயம் கவர்ந்த இளம் தலைவர் கழக இளைஞர் அணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அன்புக் கட்டளைக்கிணங்க

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர்களில் அடங்கியுள்ள வார்டு - கிளைகளில், வீடு வீடாகச் சென்று 15வது வயது நிரம்பிய இளைஞர்களை கழக இளைஞர் அணியில் புதிய உறுப்பினர்களாக சேர்த்திடும் பணியில் கழகத்தினரும் - இளைஞர் அணியினரும் இணைந்து ஈடுபட வேண்டும் என்று மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் பம்மல், இரட்டை பிள்ளையார் கோயில் அருகே அமைந்துள்ள எஸ்.எஸ். மகால் திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் த. துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக்கழகதுணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ. விசுவநாதன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ. தமிழ்மணி, எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், செங்கை மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், த.ஜெயக்குமார், வே.கருணாநிதி, இ. ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன், பெருங்களத்தூர் சேகர்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், நகரச் செயலாளர்கள் எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு. தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தொ.மு.ச. பேரவைச் செயலாளர் இரா.பொன்னுராம், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், க.தேவேந்திரன், மூவ சரம்பட்டு சதீஷ், ஆர்.எஸ்.சங்கர், மா.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், எம்.செல்வகுமார், ஜிஜேந்திரன் ராமு, சே.அருள்தேவி,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலகண்ணன், கே.மணி கண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, தி.க. பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில் தே வராஜ், பா.ஞானபிரகாசம், சசிகலா, த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ் கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டம், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே. ஏ.சத்திய பிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

மறைந்தும் மறையாமல் தமிழக மக்களின் இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கும், நம்முடைய தமிழினத் தின்ஒப்பாரும் மிக்காரும் இலா தனிப் பெரும் தலைவர் இந்திய அரசியல் வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற ஈடு இணையற்ற தலைவர்,

5 முறை தமிழக முதல் அமைச்சராக சிறப்பான முறையில் பார் போற்றும் வகையில் பணியாற்றி தமிழக மக்களின் நலனுக்காக அரும்பாடுபட்டு தமிழக அரசின் நிர்வாக வரலாற்றில் பொற்கால ஆட்சியைத் தந்து விண் முட்டும் சாதனைகளால் தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்து சென்று, இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளி விளக்கேற்றிய சரித்திரம் படைத்த முதல்வர்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6வது ஆண்டு நினைவு தினத்தை யொட்டி, வருகிற 782024 புதன்கிழமை அன்று காலை 7.00 மணியளவில் நம்முடைய அன்புத் தலைவர் தமிழ்நாடு முதல் அமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை, அண்ணாசாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் இருந்து புறப்படும் அமைதி ஊர்வலத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்தும் கழகத்தினர் அனைவரும் ஆயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்று சிறப்பித்திட வேண்டும் என்றும்,

அத்துடன் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிளைகளிலும், மாநகர பகுதி நகர பேரூர்களில் உள்ள அனைத்து கிளை களிலும் நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்தை மலர்களால் அலங்கரித்து வைத்து கழகத்தினர் அனைவரும் அன்னாரது படத்திற்கு மலர்தூவி மலர் அஞ்சலி செலுத்திடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஏகமனதாகதீர்மானிக்கிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் அடங்கி உள்ள வார்டு கிளைகளில், 15 வயது நிரம்பிய இளைஞர்களை வீடு வீடாகச் சென்று, தாய் கழகத்தில் புதிய உறுப்பினர்களை சேர்ப்பது போல,

கழக இளைஞர் அணியில் புதிய உறுப்பினர்களை சேர்த்து, கழகத்தின் வருங்கால வளர்ச்சிக்கு சிறப்பான அடித்தளம் அமைத்திடும் இன்றியமையாத பணியில், அந்தந்த வார்டு கிளைகளின் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அந்தந்த பகுதியில் உள்ள இளைஞர் அணியின் நிர்வாகிகள் ஒன்றிணைந்து செயல்பட்டு வார்டு கிளைகளில் புதிய உறுப்பினர்களை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வீடு வீடாகச் சென்று சேர்த்து இளைஞர் அணி அமைப்பை பலப்படுத்திடுவது என்றும்,

இதற்கான பணிகளை அந்தந்த ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகச் செயலாளர்கள் முன்னின்று செய்திட வேண்டும் என்றும், இந்த முக்கியமான பணியை அந்தந்த பகுதியில் முழுமையாக நடைபெறுவதை கண்காணிப்பதற்காக மாவட்டக் கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகளிடம்,

அந்தந்த ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணியில் உறுப்பினர்கள் சேர்க்கும் சுற்றுப் பயண விவரத்தை பட்டியலிட்டு துண்டறிக்கையாக அச்சிட்டு தந்து அவர்களுடன் சென்று புதிய உறுப்பினர்களை சேர்த்திடும் பணியில் ஈடுபட்டு இளைஞர் அணி அமைப்பை மேலும் பலப்படுத்திடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஒருமனதாக முடிவெடுக்கிறது.

தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான தரமான மற்றும் குறைந்த வாடகையில், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் வடகால் சிப்காட் தொழிற்பேட்டையில் 20 ஏக்கர் பரப்பில், ரூ.706.50 கோடி மதிப்பீட்டில் 13 பகுதிகளாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ள 18,720 படுக்கைகள் கொண்ட தங்கும் விடுதியை வருகிற 18.8.2024 அன்று காலை நம்மை எல்லாம் அன்பால் வழிநடத்திச் செல்லும் அன்புத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க வருகை தரும் மாபெரும் விழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள் அனைவரும் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்பது என்றும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வல்லக்கோட்டையில் என்ற இடத்தில் நடைபெறும் மாபெரும் வரவேற்பு நிகழ்ச்சியில், மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் தமது கரங்களில் கழகத்தின் இருவண்ணக் கொடி வரவேற்பு பதாகைகளை ஏந்தி நின்று, மேளதாளம் பாண்டு வாத்தியங்கள் முழங்க பிரம்மாண்ட முறையில் வரவேற்பு அணித்திடுவது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக முடிவெடுக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சென்னை மற்றும் மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் புதிய பார்வை நேரம் தகவல் பலகை திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்திர மோகன், அருங்காட்சியகங்கள் துறை ஆணையர் திருமதி கவிதா ராமு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தலைவா எழுந்து வா !

தமிழ் இன பண்பு காத்து,
எழிலான இலக்கியம் படைத்து,
மொழி சிறக்க உழைத்தவரே,
துயில் கொள்ளச் சென்றீரோ?

அரசியலார்க்கு ஆசானே,
கவிஞர்களின் கவிஞரே,
பன்முகக் கலைஞரே,
ஓய்வெடுக்கச் சென்றீரோ?

இறைவன் படைத்த மானிடரை,
மூடர்களாக மாறிடச் செய்யும்,
மூட பழக்க வழக்கத்தை,
மண்மூடிப் புதைத்த காவலரே;

திருவாரூர் தேரை வலம் வரச் செய்தீர்,
ராமானுஜரின் வரலாற்றைத் தந்தீர்,
உணர்வை அறிவால் பகுத்து விளக்கியதால்,
நாத்திகர் என்ற பெயரும் பெற்றீர்;

மொழிகளில் உயர்ந்தது தமிழ் மொழி என்றீர்,
அதனால் செம்மொழி என ஏற்கச் செய்தீர்,
திருக்குறளே நம் வேதம் என்றீர்,
வள்ளுவருக்குச் சிலை எழுப்பி,
குறளுக்கு உரை தந்தீர்;

அய்யா...
'மத்தியில் கூட்டாட்சி' என
கொள்கை முழக்கம் செய்தீர்,
ஆனால் இன்றோ

ஜாதி – மத – பொருளாதாரத்தால்,
பிளவுபடுத்தி சமுதாயத்தை,
பிரிவினை ஒன்றே கொள்கையாக்கி,
மக்களை மதிக்காமல் செயல்படுகின்ற;
வேஷம் தரித்த பாத்திரங்களை,
கண்டு சகிக்கும் நிலைதான் இன்று!

பொய்மை பரப்பும் ஊடகக் கூட்டம்,
விமர்சிப்பவருக்கோ சிறைவாசம்;

அன்பு மணிக்குடையின் கீழ்,
அறத்துடன் ஆண்டது அன்று,

இன்றுள்ள கொற்றக் குடை,
குற்றக் குடையாய் நிற்கிறது;

மத்தியிலே,
சமுதாய நலன் கொண்ட
அரசியலும் இல்லை,
சிலர் வாழ பலர் வாடும்
ஆட்சிதான் இன்று;

தலைவா நீ வா....
ஓய்வு எடுத்தது போதும்..
தலைவா எழுந்து வா....

மதத்தின் பெயரால் தாய் நாட்டைப்
பாழ்படுத்துகின்றார்,
தமிழ் மொழியை கீழ்ப்படுத்துகின்றார்,
தமிழர் பிறரிடம் கை ஏந்தாமல் வாழ,
சுயமரியாதை உணர்வூட்ட,
தமிழினத் தலைவா எழுந்து வா...

ஜாகீர் உசேன்

நெல்லை கிழக்கு மாவட்டத்தில்

முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, ஆக. 5 - நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6 வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வருகிற 7 ம்தேதி நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் காலை 9 மணி அளவில் திசையன்விளை நேரு திடல் முன்பு அமைதி பேரணி ஆரம்பித்து திசையன்விளை பழைய பேருந்து நிலையம் முன்பு முடிவடையும். அதன் தொடர் நிகழ்வாக அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள முத்தமிழ் றிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

அது பற்றிய விவரம் வருமாறு.

நெஞ்சம் நிறைந்து வாழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் வருகின்ற ஆகஸ்ட் 7ஆம் தேதி ஆகும்.தமிழ் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும்,தமிழ் நாட்டு மக்களின் நலனுக்காகவும்,தான் ஆட்சி செய்த போதெல்லாம் நாளும் பல நல்ல திட்டங்களை சமுதாயத்தில் அடித்தட்டு மக்களுக்கு தந்தவர்.நம் நெஞ்சம் நிறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன்னுடைய எழுத்துக்களாலும் ஆட்சி காலத்தில் செய்த நலதிட்டங்கள் மூலமாகவும் இன்றும் தமிழக மக்களின் நெஞ்சில் குடி கொண்டுள்ளார்கள்.

வரலாறுகளை படைப்பதில் நாயகராக இருந்து இந்திய வரலாற்றில் ஒட்டு மொத்த இந்திய தலைவர்களும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை சந்திக்க கோபாலபுரம் இல்லம் வந்தார்கள். இவ்வாறு அனைத்து தரப்பினரின் அன்பை பெற்ற நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நம்மை எல்லாம் மீளா துயரத்தில் ஆழ்த்தி விட்டு 07.08.2018 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு அருகில் துயில் கொள்ள சென்றுவிட்டார்கள்.

வாழும் போது போராட்டகளம் கண்டது போல் தான் மறைந்த போதும் சட்டப் போராட்ட களம் கண்டார்.

தமிழினத்தை காப்பதற்காக தனக்குப் பின்னால் நம் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களை நமக்கு வழிகாட்டியாக சுட்டிக் காட்டி சென்றுள்ளார். கழகத் தலைவர் அவர்களும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களைப் போல் தமிழக மக்களின் நலனுக்காக நாளும் உழைத்து வருகிறார்.நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அன்புத் தளபதியார் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவை போற்றும் வகையில்,

வருகின்ற 07.08.2024 காலை 9 மணி அளவில் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் எனது தலைமையில் திசையன்விளை நேரு திடல் முன்பு அமைதி பேரணி ஆரம்பித்து திசையன்விளை பழைய பேருந்து நிலையம் முன்பு முடிவடையும்.அதன் தொடர் நிகழ்வாக அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய திருவுருவப்படத் திற்கு மாலை அணிவித்து மலர்தூவி புகழஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில அணி நிர்வாகிகள்,தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள்,இராதபுரம் கிழக்கு, மேற்கு,ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள்,நிர்வாகிகள், திசையன்விளை பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள்,மாவட்ட பிரதிநிதிகள், நகர்ப்புற, ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,கழகத்தோழர்கள் ஆகியோர் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுபோன்று திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர,பேரூர்,கிளை,வார்டு, கழக உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள் திருவுருவப் படத்தை மலர்களால் அலங்கரித்து மலர்தூவியும் புகழஞ்சலி செலுத்த கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் அந்த பகுதியை சேர்ந்த ஒன்றிய,நகர,பேரூர்,கிளை, வார்டு,செயலாளர்கள்,நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள்,நகர்புற,ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் சார்பு அணிகளுடைய அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத்தோழர்கள் உள்பட அனைவரும் தவறாது புகழஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நினைவை போற்ற வேண்டும்.என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி ஒடுக்கத்தூர் பேரூராட்சி பகுதியில் "மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் மாவட்டகழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ கலந்து கொண்டு பொது மக்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டார். இதில் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு, ஒன்றிய செயலாளர்கள் பி.வெங்கடேசன் கோ.குமரபாண்டியன் பேரூராட்சி செயலாளர் பெருமாள்ராஜா மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.பிராகாஷ் தாசில்தார் வேண்டா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.